# திராவிடத்தால் வாழ்கிறோம்

**765**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிடம் தந்த பரிசு!



மாண்புமிகு முதலமைச்சர்-தி.மு. கழகத் தலைவரின் பிறந்தநாளை நலத் திட்ட உதவிகள், பொதுக் கூட்டங்கள், கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், சுவரொட்டி விளம்பரங்கள், பேனர்கள் என அவரவர் வசதி வாய்ப்புக் கேற்பக் கொண்டாடும் நிலையில், அவரைப் பற்றி, 'வாழும் பெரியார்-அம்பேத்கர்-அண்ணா-கலைஞர்-முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' என்ற தலைப்பில், தான் எழுதிய புத்தகத்தின் அறிமுக விழாவை, அன்பகம், அண்ணா அரங்கத்தில் நடத்தி, மிகச் சிறப்பான பிறந்த நாள் பரிசை அளித்திருக்கிறார் மருத்துவர் திட்டக்குடி செந்தில்.

சிறிய கிராமத்தில், எளிய குடும்பத்தில், உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கிய இடஒதுக்கீடு- முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கான கல்வி வாய்ப்பு, ஒற்றைச் சாளர முறையிலான மருத்துவப் படிப்பு இவற்றால் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து, இன்று எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார் மருத்துவர் செந்தில்.

தனக்குக் கிடைத்த வாய்ப்பு போல, நூறாண்டு கால திராவிட இயக்கம் எந்தெந்தத் துறைகளில் வாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளது என்பதையும், அண்ணல் அம்பேத்கர் உருவாக்கிய அரசியல் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற, தி.மு.க எப்படிப் பாடுபடுகிறது என்பதையும், திராவிட மாடல் அரசின் முதல்வர் கொண்டு வந்துள்ள திட்டங்கள் தமிழ்நாட்டில் ஏற்படுத்தியுள்ள வளர்ச்சியையும், அந்த நூலில் அவர் பதிவு செய்துள்ளார்.

இந்தப் புத்தக விழாவின் மேடையில், நூலாசிரியரான மருத்துவர் திட்டக்குடி செந்திலின் பெற்றோர், கழக முன்னோடிகளால் சிறப்பிக்கப்பட்டனர். தன் மகனை, சான்றோன் எனக் கேட்ட அந்த கிராமத்துப் பெற்றோர்களின் மனதில் மலர்ந்த மகிழ்ச்சிதான் அவர்களுக்குத் திராவிட இயக்கம் தந்துள்ள பரிசு.

பத்திரிகையாளர் கோவி.லெனின் முகநூல் பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### உத்வேகம் அளிக்கும் படம்!



பூ.சுப்பிரமணியன்

1998-ஆம் ஆண்டு, வீரம் விளைந்த நெல்லைச் சீமை, டவுன் பகுதியில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிக்கு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் வருகை தந்து சிறப்புரையாற்றினார். அவருடன் மேடையில், அமர்ந்திருக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது என் பேறு. இந்தப் படம் என்றென்றும் எனக்கு உத்வேகம் அளிக்கக்கூடியது.

**- பூ.சுப்பிரமணியன்,**
**தச்சநல்லூர் பகுதிக் கழகச் செயலாளர்,**
**நெல்லை மாநகராட்சி 3-வது வார்டு மாமன்ற உறுப்பினர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பிரியம் கோரும் திராவிட நாடு!

1969-ஆம் ஆண்டு ஜூலையில் ஆந்திர மாநில வெள்ளத்திற்கு, தமிழ்-ஆந்திர நடிகர்கள் இணைந்து ரூ.6 லட்சம் நிதி திரட்டினர். தேனாம்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழக முதல்வராக இருந்த கலைஞர், ஆந்திர முதல்வராக இருந்த பிரமானந்த ரெட்டியிடம் நிதியை வழங்கினார். அம்மேடையில் எம்.ஜி.ஆர். (கேரளா), ராஜசேகரமூர்த்தி (கர்நாடக அமைச்சர்) ஆகியோரும் இருந்தனர். "இந்த மேடையில் திராவிட நாடே இருக்கிறது. இது பிரிய வேண்டிய நாடல்ல, பிரியம் கோரும் திராவிட நாடு" என்று கூறி கலகலப்பூட்டினார் கலைஞர்.

# கலைஞரும் நானும்

**110**

**"முத்தமிழறிஞர் கலைஞரின் தமிழை நீராகவும், அவர் ஊட்டிய பகுத்தறிவை உரமாகவும், இன உணர்வுடனும் மொழி உணர்வுடனும் அவர் அளித்த உயரிய வாழ்க்கையை வாழும் எளியவன் நான்" எனத் தனது நினைவுகளைப் பகிர்கிறார் தமிழ் வளர்ச்சித் துறை முன்னாள் இயக்குநர் கூ.வ.எழிலரசு.**





## "நான் வழக்கமான முதல்வர் இல்லையே!"

**கூ.வ.எழிலரசு, தமிழ் வளர்ச்சித்துறை முன்னாள் இயக்குநர்**

1960-ஆம் ஆண்டுகளில் முத்தமிழறிஞர் கலைஞரை அறியாத சிறுவர்கள் இருக்க முடியாது. அவரது திரைக்கதை வசனங்கள்தான், அன்றைய பள்ளி மாணவர்களுக்கு மனப்பாடப் பாடம். அதற்கு நானும் விதிவிலக்கு அல்ல.

1964-ஆம் ஆண்டு என்னுடைய 12 வயதில் 'பூம்புகார்' திரைப்படம் வெளியானது. அந்தத் திரைப்படம் தொடங்கும்போது கலைஞர் உரை நிகழ்த்துவார். அந்த உரை, பள்ளி மாணவர்களின் பேச்சுப் போட்டி, ஒப்பித்தல் போட்டிகளுக்குப் பெரும் ஊக்கம் அளித்தது. நானும் அந்த உரையை மனப்பாடம் செய்து ஒப்பித்து, பல போட்டிகளில் பரிசு வாங்கினேன். அப்போதே, என் நெஞ்சில் குடியேறினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அவரது தமிழ்தான் பின்னாட்களில் நான் தமிழிலக்கியம் படிப்பதற்கு வழிவகுத்தது . அவருடைய தமிழால், எங்கோ இருந்த நான், வாசித்தேன் வளர்ந்தேன், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றேன்.

### பாடல் தலைவன் கலைஞர்

1976-ஆம் ஆண்டில், நான் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் முதுகலை பயின்ற காலத்தில் பேரா.சுபவீரபாண்டியன் என் வகுப்புத் தோழமை. அப்போது நடந்த ஒரு வெண்பா போட்டியில், 'தமிழனைக் காக்கும் தமிழ்' என ஈற்றடியாகத் தரப்பட்டது. நான் கலைஞரைப் பாட்டுத் தலைவராக வைத்து, எழுதிய வெண்பா இரண்டாவது பரிசு பெற்றது. இப்படியாக பள்ளிக் காலத்திலும், கல்லூரிக் காலத்திலும் கலைஞரே என் நாயகராக இருந்தார்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நாடகங்களை ஆய்வு செய்திருந்தேன். அந்த ஆய்வேட்டை, நூலாக்கம் செய்தபோது, கலைஞரிடம் வாழ்த்துரை பெற விரும்பினேன். அப்போது, கழகத்தின் சட்டமன்றக் கட்சி அலுவலகம், இராஜாஜி மண்டபத்தின் பின்புறம் இருந்தது. அப்போதுதான், என் பாட்டுத் தலைவர் கலைஞரை முதன்முதலாக நேரில் சந்தித்தேன். வாழ்த்துரையைப் பெற்று, அவர் கையெழுத்திலேயே அச்சிட்டு, நூலைக் கொண்டு சென்றேன். முதன்முதலில் அமைந்த அந்த இரண்டு சந்திப்புகளும் என் வாழ்நாளில் மறக்க முடியாதவை.

கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, இலக்கிய அணியின் செயல்பாடுகளும் தீவிரமாக இருந்தன. நானும் இலக்கிய அணியில் இணைந்து கவியரங்கம், பட்டிமன்றங்களில் பயணப்படத் தொடங்கினேன். கலைஞரின் மணிவிழா கவியரங்கில், முதன்முதலாக அவருக்கு முன்பாக கவிதை வாசிக்கும் வாய்ப்பு அமைந்தது.

தொடர்ச்சியாகப் பல மேடைகளில், முன் வரிசையில் அவர் அமர்ந்திருக்க, நான் கவிதை வாசித்த அனுபவங்கள் என்னால் மறக்க முடியாதவை. 1990-ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற கழகத்தின் திருப்புமுனை மாநாட்டுக் கவியரங்கில் பங்குபெற்றேன். குறிப்பாக, பாடுபொருள் அவர் மெச்சும் வகையில் இருக்கவேண்டும், பாராட்டும் வகையில் இருக்கவேண்டும் என்பதுதான் அப்போது மனதில் ஓடும். தலைவரும், சிறுபுன்னகையில் அந்தப் பரிசினை அளிப்பார். நான் கவிதை பாடினேன் என்பதைவிட, அவற்றை கலைஞர் அமர்ந்து கேட்டார் என்பதுதான், எனக்கான உந்தாற்றலாக ஊடுருவி நிலைத்தது.

1989-ஆம் ஆண்டில் 'நீதிக்கட்சித் தலைவர் டி.எம்.நாயர்- வாழ்வும் தொண்டும்' என நான் எழுதி, பாரி நிலையம் வெளியிட்ட நூலை, அண்ணன் ஆயிரம் விளக்கு உசேன் அவர்களுடன் சென்று கலைஞர் அவர்களிடம் கொடுத்தேன். அதை வாசித்துவிட்டு, 'இதை எல்லோரும் படிக்க வேண்டும்' என உசேன் அண்ணனிடம் கலைஞர் கூறியிருக்கிறார். பின்னாட்களில் அந்த நூல் பதிப்பில் இல்லாதபோது, அந்த நூலை மீண்டும் வெளியிடுமாறு தலைவர் கேட்டுக்கொண்ட தகவலும் எனக்கு வந்தது.

### வள்ளுவர் கோட்டம்

1991-ஆம் ஆண்டு, தமிழ் வளர்ச்சித் துறையில் உதவி அலுவலராகப் பணியாற்றியபோது, கலைஞர் பதவி ஏற்ற பிறகு, துறையின் சார்பில் 'திருவள்ளுவர் திருநாள் விழா' ஏற்பாடு செய்யப்பட்டது. வழக்கமாக கடற்கரையில் உள்ள வள்ளுவர் சிலைக்கு முதலமைச்சரும், அமைச்சர்களும் மாலை அணிவித்து மரியாதை செய்வர். துறை அலுவலர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்த நிலையில், நான் அவரிடம், "முதலமைச்சர் வள்ளுவர் கோட்டத்தில் உள்ள சிலைக்குத்தான் வர விரும்புவார். அதனால் அங்கு ஏற்பாடுகளைச் செய்வோம்" என்றேன். அவர், நான் கூறியதை ஏற்கவில்லை. வழக்கம்போல ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, முதல்நாள் மாலை முதலமைச்சரைச் சந்திக்க, அவரது அறைக்குச் சென்றோம்.

> **"தமிழறிஞர்களின் குடும்பத்தினர் கலைஞரை நலம் விசாரிக்கையில், அந்த இடமே கலகலப்பாக இருக்கும். அவரது சொல்லோவியங்கள் அருகில் இருப்போர் மனதுக்குள் ரசிக்கும்படி இருக்கும்."**

எங்களை வரவேற்றவர், நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டு, எங்கே வரணும் எனக் கேட்டார். எனது உயர் அலுவலர், "கடற்கரையில் உள்ள வள்ளுவர் சிலை, வழக்கமாக அங்குதான் மாலை அணிவித்தல் நடக்கும்" என்றார். உடனே கலைஞர் "நான் வழக்கமான முதலமைச்சர் இல்லையே; தெரியாதா? வள்ளுவர் கோட்டம் என்னாச்சு?" என்றார்.

"சரிங்க அய்யா, அங்கு ஏற்பாடு செய்கிறோம்" எனச் சொல்லிவிட்டு வெளியே வந்தோம். மறுநாள் நிகழ்ச்சி முடிந்து, கலைஞர் செல்லும்வரை, எனது உயர் அலுவலர், "நான் வழக்கமான முதல்வர் இல்லை என ஒரே வார்த்தையில் முடிச்சிட்டாரே" எனக் கூறிக்கொண்டே இருந்தார். நானும் கேட்டுக் கொண்டே இருந்தேன். வரலாற்றைத் தன்னிடம் வரவழைக்கும் தலைவரை, வழக்கமான நடைமுறை என்கிற பெயரால் தடுத்து நிறுத்த முடியுமா என்ன? என அப்போது எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

### அவ்வையாரின் நெற்றி

2009-ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநராக கூடுதல் பொறுப்பேற்றபோது, கலைஞரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். பலகாலம் அவரைச் சந்தித்துக் கொண்டே இருப்பவன் என்பதால், 'ஒருபார்வை, ஒரு தலையசைப்புதான்' அதுவே நமக்கு நிறைவான வாழ்த்தை வழங்கும். 'நிறைய பணிகள் இருக்கு' என வாழ்த்தினார். ஏனென்றால், அப்போது தமிழ் வளர்ச்சித் துறையை அவர் பொறுப்பில் வைத்திருந்தார். 2010-ஆம் ஆண்டில், செம்மொழி மாநாட்டின் சிறப்பு மலர் குழுவுக்கு பேராசிரியர் அவர்கள் தலைவராக இருந்தார். என்னை ஒருங்கிணைப் பாளராக அறிவித்தார் கலைஞர். மலரில் இலக்கிய வகையில் அமைந்த ஓவியங்களுக்கு சிறு சிறு கவிதைகளை நான் எழுதியதை வெகுவாகப் பாராட்டினார் கலைஞர்.

அந்த மலர் பணியின்போது, ஓவியங்களை அவர் ரசிக்கும் நுட்பம் அறிந்து வியந்திருக்கிறேன். செம்மொழிப் பாடல் ஓவியத்தில், ஔவையின் நெற்றிச்சுருக்கம் மதக்குறி போன்ற கோடுகள் போன்றுள்ளன, அவற்றை எடுத்து விடுங்கள் என்றார். செம்மொழி மாநாடு சிறப்பாக நடைபெற்றதில் கலைஞர் அவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார்.

கலைஞரின் ஆட்சிக்காலங்களில்தான் தமிழறிஞர்களின் நூல்கள் பலவும் நாட்டுடைமை யாகின. வறுமையில் இருந்த தமிழறிஞர்களின் குடும்பத்தினரை மீட்டிருக்கிறார். பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் வாரிசுகள் வறுமையில் இருப்பதாக ஒரு பத்திரிகை செய்தி அறிந்து, அடுத்த இரண்டு நாட்களில் அவர்களுக்கு உதவித் தொகைக்கு ஆணை யிட்டார். தமிழறிஞர்களின் குடும்பத்தினர் கலைஞரை நலம் விசாரிக்கையில், அந்த இடமே கலகலப்பாக இருக்கும். அவரது சொல்லோவியங்கள் அருகில் இருப்போர் மனதுக்குள் ரசிக்கும்படி இருக்கும். அப்படி பலமுறை நான் உடன் இருந்திருக்கிறேன். "நான் வழக்கமான முதல்வர் இல்லையே" என்கிற அந்த வார்த்தைகள்தான் அந்த வரலாற்றுக்குச் சான்று!

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

....நிறைவடைந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131